## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 22, 2017

**1. சர்வதேச சூரிய கூட்டணியின் (International Solar Alliance) முழு நேர இடைக்கால இயக்குநர் ஜெனரலாக (IDG) நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. உபேந்திரா திரிபாதி
B. நவீன் ஜெயின்
C. சேதன் சவுகான்
D. தீரஜ் சர்மா

**விடை: A. உபேந்திரா திரிபாதி**

கர்நாடகா பணிப்பிரிவு ஐஏஎஸ் அதிகாரி உபேந்திரா திரிபாதி, சர்வதேச சூரிய கூட்டணியின் (International Solar Alliance) முழு நேர இடைக்கால இயக்குநர் ஜெனரலாக (IDG) நியமிக்கப்பட்டுள்ளார். ISA-வின் நோக்கம் பாதுகாப்பான, வசதியான, மலிவான, நியாயமான மற்றும் நிலையான முறையில் வருங்காலத்தில் ஐஎஸ்ஏ உறுப்பு நாடுகளின் ஆற்றல் தேவைகளை சந்திக்கும் சூரிய சக்தியை பயன்படுத்துவதை அதிகரிக்க வேண்டும் என்ற பொதுவான இலக்குகளை அடைய உதவும் மற்றும் ஒரு நேர்மறையான பங்களிப்பை வழங்கும் உலக சமூகங்களான இருதரப்பு மற்றும் பல்தரப்பு அமைப்புக்கள், பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பங்குதாரர்களும், சூரிய வள பணக்கார நாடுகளும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்க ஒரு பிரத்யேக மேடையை வழங்குவதாகும். ஐஎஸ்ஏ-வின் தலைமையகம் குர்கானின் கவல்பஹாரியில் உள்ள National Institute of Solar Energy (NISE)-ல் அமைந்துள்ளது.

**2. எந்த நாடு, 2017 ஸ்பெஷல் ஒலிம்பிக்ஸ் உலக குளிர்கால விளையாட்டு போட்டிகளை நடத்துகிறது ?**

A. அயர்லாந்து
B. ஆஸ்திரியா
C. கனடா
D. அமெரிக்கா

**விடை: B. ஆஸ்திரியா**

ஸ்பெஷல் ஒலிம்பிக்ஸ் உலக குளிர்கால விளையாட்டு போட்டிகளின் 12-வது பதிப்பு மார்ச் 14-ஆம் தேதி முதல் ஆஸ்திரியாவின் க்ராஸ் மற்றும் ஸ்சல்டமிங்கில் தொடங்கியது, மார்ச் 25 வரை போட்டிகள் தொடரும். 105 நாடுகளைச் சேர்ந்த 2,600 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் போட்டியில் பங்கு பெறுகின்றனர். இந்தியாவில் இருந்து சிறப்பு ஒலிம்பிக் பாரத்தை (SOB) சேர்ந்த 89 மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் கொண்ட அணி இப்போட்டியில் பங்கேற்கின்றது. தற்போது நடைபெற்று வரும் 2017 ஒலிம்பிக் உலக குளிர்கால விளையாட்டு போட்டியில் இந்தியா இதுவரை 18 பதக்கங்களை வென்றுள்ளது. சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள், அறிவுசார் ஊனமுற்ற தடகள வீரர்களுக்காக நடத்தப்படும் ஒரு சர்வதேச விளையாட்டு போட்டியாகும், இதனை சிறப்பு ஒலிம்பிக் ஏற்பாடு செய்கிறது.

**3. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC ) புதிய தலைமை நிதி அதிகாரியாக (Chief Financial Officer) நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. நிதின் ரெட்டி
B. ரேகா பரத்வாஜ்
C. விஷால் கிருஷ்ணா
D. அங்கூர் கன்னா

**விடை: D. அங்கூர் கன்னா**

அங்கூர் கன்னா, சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC) புதிய தலைமை நிதி அதிகாரியாக (CFO) நியமிக்கப்பட்டுள்ளார். மார்ச் 2017 இறுதியில் துபாயில் உள்ள ஐசிசி தலைமையகத்தில் இவர் பணியில் சேர்வார். இதற்கு முன்பு, ஏர் ஆசியா இந்தியாவின் தலைமை நிதி அதிகாரியாக இவர் இருந்தார். ஏர் ஆசியா இந்தியாவிற்கு முன்னர், ஏர் பிரான்ஸ் / கேஎல்எம் ராயல் டச்சு ஏர்லைன்ஸ் மற்றும் பிரிட்டிஷ் அமெரிக்கன் புகையிலையின் கூட்டாளி நிறுவனமான ஐடிசியில் மூத்த பதவிகளில் கன்னா பணியாற்றியுள்ளார்.

**4. காமன்வெல்த் நாடுகள் மற்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டு நிலப்பகுதிகளின் பொது தணிக்கையாளர்களின்(Auditors General) 23-வது மாநாட்டை எந்த நாடு ஏற்பாடு செய்திருந்தது ?**

A. இந்தியா
B. ஐவரி கோஸ்ட்
C. புர்கினா பாசோ
D. மால்டா

**விடை: A. இந்தியா**

காமன்வெல்த் நாடுகள் மற்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டு நிலப்பகுதிகளின் பொது தணிக்கையாளர்களின்(Auditors General) 23-வது மாநாடு, 2017 மார்ச் 21-23 வரை புது தில்லியில் நடைபெற்றது. மாநாட்டில் 52 காமன்வெல்த் நாடுகள் மற்றும் 9 பிரித்தானிய கடல்கடந்த மண்டலங்கள் கலந்து கொண்டனர். மாநாட்டின் கருப்பொருள் “Fostering Partnerships for Capacity Development in Public Audit” என்பதாகும். மதிப்புமிக்க இம்மாநாடு இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் முறை, இதனை கம்ப்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் (CAG) ஏற்பாடு செய்தது. கடைசியாக இதுபோன்ற மாநாடு 2014 இல் மால்டாவில் நடைபெற்றது.

**5. எந்த மத்திய அமைச்சகம், 5வது ராஷ்டிரிய சமஸ்கிருத மஹோட்சவ் (RSM) 2017-யை ஏற்பாடு செய்துள்ளது ?**

A. பழங்குடி விவகார அமைச்சகம்
B. கலாச்சார அமைச்சகம்
C. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்
D. திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம்

**விடை: B. கலாச்சார அமைச்சகம்**

5-வது பதிப்பான 'ராஷ்டிரிய சமஸ்கிருத மஹோட்சவ் (RSM) 2017', அருணாச்சல பிரதேசத்தின் தவாங்கில் மார்ச் 23 ஆம் தேதி தொடங்கியது மற்றும் மார்ச் 31 வரை திமாபூர் (நாகாலாந்து), மஜூலி (அசாம்), இம்பால் (மணிப்பூர்), அய்சால்(மிசோரம்), கேங்டாக் (சிக்கிம்), ஷில்லாங் (மேகாலயா) உட்பட இதர வடகிழக்கு மாநிலங்களுக்கும் நீட்டிக்கப்படும். கலாச்சார அமைச்சகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. RSM-2017-யின் நோக்கமானது, பாரம்பரியம் மற்றும் இந்திய கலாச்சாரத்தின் கலாச்சார பன்முகத்தன்மையை

பாதுகாப்பது, ஊக்குவிப்பது மற்றும் பிரபலப்படுத்துவது மற்றும் இந்திய கலாச்சாரத்துடன் புதிய தலைமுறையை மீண்டும் இணைப்பது ஆகும். வட கிழக்கு இந்தியாவில் இருந்து சுமார் 5,000 கலைஞர்கள் மற்றும் நாடு முழுவதும் இருந்து 2,000 கலைஞர்கள் நிகழ்ச்சிகள், கலை மற்றும் உணவு மூலம் இந்திய கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்துவார்கள்.

**6. 2017 குளோபல் ஆசிரியர் பரிசு வென்ற மேகி மெக்டோனெல்(Maggie MacDonnell), எந்த நாட்டை சேர்ந்தவர் ?**

A. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
B. சீனா
C. ஜப்பான்
D. கனடா

**விடை: D. கனடா**

கனடாவை சேர்ந்த மேகி மெக்டோனெல், அவரது மாணவர்களின் வாழ்க்கை நிலையை மாற்றியதற்காகவும், அதிக தற்கொலை விகிதம் கொண்ட சல்லுய்ட் கிராமத்தில் தனது சமூகத்தினை உருமாற்றியதற்காகவும் 2017 குளோபல் ஆசிரியர் பரிசை வென்றுள்ளார். இன்னுயிட் கிராமமான சல்லுய்ட், கனடிய ஆர்க்டிக் பகுதியில் ஆழமாக இருக்கிறது. பனி மற்றும் பனிக்கட்டிகளால் சூழப்பட்டு உலகின் மிகவும் தனித்துவிடப்பட்டிருக்கும் (Remote regions) இடங்களில் இதுவும் ஒன்றாகும். ஹெச்ஹெச் ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்டொம், ஐக்கிய அரபு நாடுகள் துணை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் துபாய் எமிர் தலைமையில் வர்க்கே அறக்கட்டளை மூலம் குளோபல் ஆசிரியர் பரிசு வழங்கப்பட்டது.

**7. பின்வரும் மாவட்டங்களில் எது, இந்தியாவின் முதல் கார்பன் நடுநிலை மாவட்டமாக மாறவுள்ளது ?**

A. மஜுலி
B. தவாங்
C. விசாகப்பட்டினம்
D. நாளந்தா

**விடை: A. மஜூலி**

சமீபத்தில் அசாம் மாநில முதல்வர் சர்பானந்தா சோனோவால், இந்தியாவின் முதல் கார்பன் நடுநிலை மாவட்டம் மற்றும் பல்லுயிர் பாரம்பரியமாக மஜூலியை மேம்படுத்த தேவையான முயற்சிகளை தொடங்கி வைத்தார். இது தவிர, அசாமின் வளம்மிக்க காடுகள் மற்றும் பல்லுயிரின் முக்கியத்துவத்தை கொண்டாட "Forests are Lives" பிரச்சாரத்தை அசாம் அரசாங்கம் நடத்த உள்ளது.

**8. உலக கவிதைகள் தினம் (World Poetry Day), எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது ?**

A. மார்ச் 22
B. மார்ச் 21
C. மார்ச் 23
D. மார்ச் 20

**விடை : B. மார்ச் 21**

மனித மனதின் ஆக்கச் சிந்தனையை கைப்பற்றும் கவிதையின் தனிப்பட்ட திறனை அங்கீகரிக்க மார்ச் 21-ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் உலக கவிதைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் கவிதை வாசிப்பு, எழுதுதல், பதிப்பித்தல் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதே இந்த தினத்தின் நோக்கமாகும்.

**9. கேரளா உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. அஜய் மாணிக்ராவ் கான்வில்கர்
B. நவ்நித்தி பிரசாத் சிங்
C. கே விஜயன்
D. டி பி ராதாகிருஷ்ணன்

**விடை: B. நவ்நித்தி பிரசாத் சிங்**

நீதிபதி நவ்நித்தி பிரசாத் சிங், கேரளா உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக நீதிபதி சிங், பாட்னா உயர்நீதிமன்றத்தில் முன்னாள் நீதிபதியாக இருந்தார். சட்டீஸ்கர் உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கவுள்ள டி பி ராதாகிருஷ்ணனின் இடத்தை நவ்நித்தி நிரப்புயுள்ளார்.

**10. 2016 சரஸ்வதி சம்மன் விருதை விருதை அள்ளிச் சென்றவர் யார் ?**

A. நையேர் மஸ்வூத்
B. சுகதா குமாரி
C. சுர்ஜித் பாடார்
D. மஹாபலேஷ்வர் செயில்

**விடை: D. மஹாபலேஷ்வர் செயில்**

குறிப்பிடத்தக்க கொங்கனி எழுத்தாளர் மஹாபலேஷ்வர் செயில், அவரது 'Hawthan' நாவலுக்காக 2017 சரஸ்வதி சம்மான் விருதை பெற்றார். கோவாவை அடிப்படையாக கொண்ட செயில், நான்கு மராத்தி நாடகங்கள் மற்றும் ஏழு கொங்கனி நாவல்ககளை தனது கணக்கில் கொண்டுள்ள புகழ்பெற்ற இரு மொழி எழுத்தாளர். விருதில் ரூ .15 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் ஒரு சான்று அடங்கும்.